DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, KUMBAKONAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C No. 380 /2023 |
| Deposition of witness | : | PW-4 |
| Name | : | அகஸ்டின் ஞானராஜ் |
| Father's /Husband Name | : | மனுவேல் |
| Village | : | கும்பகோணம் |
| Taluk | : | கும்பகோணம் |
| Age | : | 46 |
| Occupation | : | Physical Director |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 18th day June 2024.
Accused present.

**முதல் விசாரணை:-**

சாட்சி சிவகுமார் தெரியும். கடந்த **02.09.2022** ம் தேதி மாலை 06.00 மணியளவில் மேற்கு காவல் நிலையத்திற்கு நானும், சிவகுமாரும் சென்றபோது போலிசார் ஆஜர் எதிரியை விசாரித்து ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். எதிரி அவர் வேலை பார்த்த வீட்டில் நகையை திருடியதாக ஒப்புக்கொண்டார். எதிரியிடமிருந்து தங்க நகைகளை போலிசார் கைப்பற்றினார்கள், அதில் நானும், சிவகுமாரும் கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2 வது கையொப்பங்கள் என்னுடையதுதான் (**அந்த கையொப்பங்கள் முறையே அ.சா.ஆ.2 மற்றும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

அ.சா.1, அ.சா.2 பட்டியல் சாட்சி-2 ஆகியோரை தெரியுமா என்றால் அந்த தெருவில் நான் புதியதாக வந்தபோது அவர்களை தெரியும். அ.சா.1 டன் புகார் அளிக்க காவல் நிலையம் சென்றேனா என்றால் இல்லை. நான் காவல் நிலையத்திற்கு நானும், சிவகுமாரும் கையொப்பம் செய்ய சென்றோம், அங்க அ.சா.1, பட்டியல் சாட்சி-2 ஆகியோர் இருந்தார்கள். போலிசார் விசாரணையில் திருட்டு சம்பவம் எனக்கு நேரடியாக தெரியாது என கூறினேனாஎ ன்றால் அது பற்றி என்னிடம் விசாரிக்கவில்லை. காவல் நிலையத்தில் எழுத்தர் கைப்பற்றுதல் மகசரை எழுதினார், அவர் பெயர் தெரியாது. ஒப்புதல் வாக்குமூலத்தை யார், எங்கு வைத்து தயார் செய்தது என்றால் தெரியாது. ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், சிவகுமாரும் கையொப்பம் செய்தோம், வேறு யார் கையொப்பம் செய்தார்கள் என தெரியாது. மேற்படி விவரத்தை போலிசாரிடம் கூறினேனா என்றால் அதுபற்றி என்னை விசாரிக்கவில்லை. சிவகுமார் 2017 ம் வருடத்திலிருந்து எனக்கு

தெரியும். ஒப்புதல் வாக்குமூலத்தில் அனைத்து பக்கங்களிலும் கையொப்பம் செய்தேனா என்றால் நினைவில்லை, நான் இரண்டு கையொப்பம் செய்தேன். போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை, நகையை பிடித்ததாகவும், அதை ஒப்படைக்கபோவதாகவும் கூறி எங்களிடம் சாட்சி கையொப்பம் பெற்றார்கள். நான் காவல் நிலையத்திற்கு சென்றபோது மேஜையில் நகைகள் இருந்தது. நான் நாள் நேரத்தில் எதிரியிடமிருந்து தடயபொருள் கைப்பற்றவில்லை என்றாலும், அ.சா.1 எனக்கு தெரிந்த நபர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

Sd./- M. Elavarasi,
Judicial Magistrate No.I,
Kumbakonam.